கேட்பது அவர் மீது இருக்கிற வழக்கை வாபஸ் பெறவேண்டும். நான் சொல்வது அவர் ஊரில் இல்லை, அப்படி இருக்கிற போது தேர்தலுக்கு எல்லாம் வரவில்லை, அவரை யாரோ சுட வந்தார், போனார் என்று 307 செக்ஷன் எல்லாம் அவர் மீது போடப்பட்டிருக்கிறது. எனவே, அது தவறான ஒரு வழக்கு. அதுபோன்ற சம்பவம் எதுவும் நடக்கவில்லை. அவர் மீது இருக்கிற வழக்கை நீங்கள் வாபஸ் பெற வேண்டும் என்று தான் நான் கேட்டேன். வழக்கு இருக்கும். அதை விசாரிக்க மாட்டோம் என்று சொல்வது, எப்போது வேண்டுமானால் பின்னாலே பயன்படுத்திக்கொள்ளலாம். நான் கேட்பது அந்த வழக்கை வாபஸ் பெற வேண்டும் என்பது. முதலமைச்சர் அவர்கள் அப்படித்தான் அறிவித்தார்கள். வாபஸ் பெறப்படும் என்று அறிவித்தார்கள். கமிஷனர் அவர்கள் ஏதோ டெனிக்கலாக, எழுத்து மூலமாக, வரவில்லையென்று சொல்லிக் கொண்டிருக்கிறார். அதை ஏற்று, முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பை ஏற்று கமிஷனர் அவர்களை உத்திரவிடுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொன்னபோதே மேலும் விவரங்களை அறிந்து நாளைக்கு பதில் சொல்கிறேன் என்று குறிப்பிட்டேன். ஆனால் அவர்கள் இன்றைக்கே பதில் சொல்ல விரும்பி இந்தப் பிரச்சினையை எழுப்பி விட்டார்கள். நான் மேலும் போலீஸ் துறையினிடத்தில் விவரங்களை நிச்சயமாக அறிவேன். ஆனால் நான் மீண்டும் உறுதியாகச் சொல்லிக் கொள்கிறேன், எதிர்க்கட்சித் தலைவர் மீது இது தொடர்பான வழக்கு நிச்சயமாக இருக்காது.

(ஊ) பொதுக் கணக்குக் குழுத் தலைவர் நியமனம் பற்றி சில பத்திரிகைகளில் விமர்சித்திருப்பது குறித்து.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1989-90-ம் ஆண்டிற்கான இந்த சட்ட மன்றத்தில் பொதுக் கணக்குக் குழுவின் தலைவராக நான் தங்களால் நியமனம் செய்யப்பட்டேன். கடந்த ஒரு வாரமாக தமிழகத்தின் பல்வேறு வார, மாதாந்திர பத்திரிக்கைகளில் இந்த நியமனத்தை கொச்சைப்படுத்தி, ஏதோ இந்த நியமனத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காங்கிரஸ் கட்சிக்குக் கொடுத்து, அதன் மூலமாக காங்கிரஸ் கட்சியை கையில் எடுத்துக் கொண்டதாகவும், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நியாயமாக கிடைக்கவேண்டிய பதவியை மரபுகளை மீறி காங்கிரஸ் கட்சிக்குத்தந்து விட்டதாகவும், அதனால் சரியாக காங்கிரஸ் கட்சி சட்டமன்றத்தில் செயல்படவில்லை

என்றும் பல்வேறாக எழுதி வருகிறார்கள். குறிப்பாக புகழ் வாய்ந்த 'குமுதம்' பத்திரிகை கூட இந்த வாரம் எழுதியிருக்கிறது. அதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வழக்கமாக சட்டமன்றத்தில் பாரம்பரிய மரபின்படி எதிர்க்கட்சிக்குத்தான் பொதுக் கணக்குக் குழுவின் தலைமைப் பதவியை அளிப்பது வழக்கம். ஆனால், இந்த ஆண்டு பொதுக் கணக்குக் குழு ஆராய வேண்டிய கணக்கினங்கள் இன்றைக்கு எதிர்க்கட்சியாகவும், அன்றைக்கு ஆளும் கட்சியாகவும் இருந்த அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசினுடைய கணக்குகள் என்ற காரணத்தால், அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் அவர்களிடம் பொதுக் கணக்குக் குழு தலைமைப் பதவியை கொடுப்பது முறையில்லை என்ற காரணத்தால், எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிற அடுத்த பெரிய கட்சியான காங்கிரஸ் கட்சிக்குத் தரப்பட்டது. என்னைத் தலைவராக நியமித்தது தாங்கள் எங்கள் கட்சித் தலைமையையும், துணைத் தலைவர், கொறடா ஆகியவர்களை கலந்தாலோசித்து பின்னாலே இந்த நியமனத்தைச் செய்தீர்கள். எனவே, இந்த நியமனத்தில் எந்தச் சலுகையும், மரபு மீறலும், விதிகளுக்குப் புறம்பான செயலும் இல்லையென்றும், நம்முடைய முதலமைச்சருடைய கண்ணியமான அரசியலையும், எனது அரசியல் நேர்மையையும் சந்தேகிக்கிற வகையில் வதந்திகளைப் பரப்புவதைத் தடுக்கிற வகையில் நீங்கள் இந்த மன்றத்திலே ஒரு அறிவிப்பை வெளியிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பீட்டர் ஆல்போன்ஸ் எழுப்பியது முக்கியமான இன்றியமையாத பிரச்சினை. இந்த அவையிலே பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு அதற்குத் தலைவர்கள் நியமிக்கப்படுகிறபோது, ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு மரபு இருக்கிறது. அதைப் போல இந்த "பொதுக் கணக்குக் குழு" என்று பார்க்கிறபோது எந்த ஆண்டுக் கணக்குகள் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றனவோ, அந்த ஆண்டில் ஆட்சிப் பொறுப்பிலிருந்த கட்சியைச் சார்ந்தவர்கள் தலைவராக இருக்கக் கூடாது என்பது மரபு. இப்போது இருக்கிற நடைமுறையின்படி 1982-83 ஆம் நடைமுறை ஆண்டிலிருந்து 1987–88-ம் ஆண்டு வரைக்கும் இருக்கிற கணக்குகள் தான் பொதுக் கணக்குக் குழுவினுடைய ஆய்விற்கு வரப்போகின்றன. அப்போது ஆட்சியிலிருந்த கட்சி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாகும். எனவே அப்போது ஆட்சியிலிருந்த கட்சியைச் சார்ந்த எவரும் பொதுக் கணக்குக் குழுவினுடைய தலைவராக இருக்க முடியாது என்பது விதி. எனவே, அப்படி இருக்கிறபோது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் பொதுக் கணக்குக் குழுவினுடைய தலைவராக இருக்க முடியாது என்று விதி கூறுகிறபோது, அதற்கு அடுத்து

இருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள்தான் பொதுக் கணக்குக் குழுவினுடைய தலைவராக இருக்கவேண்டும். நான் அப்போது, நானாக, தனியாகக் கூட முடிவு எடுக்காமல், பேரவைத் தலைவருக்கு அந்த உரிமை இருந்தாலும், காங்கிரஸ் கட்சியினரிடம் கலந்து, அவர்கள் அனைவரும் ஒரு முகமாக எழுதிக் கொடுத்த பெயரைத்தான், தலைவராக அமர்த்தி, அறிவித்து இருக்கிறோம் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆகவே அந்த அடிப்படையில் இந்த அவையில் ஏற்படுத்துகிற சட்டமன்ற மரபின்படி எடுக்கிற முடிவுகளை அரசியல் ரீதியாகக் கொச்சைப் படுத்துவதற்கு இதழ்கள் முற்படுமானால் அவற்றின்மீது நடவடிக்கை எடுப்பது தவிர்க்க முடியாததாகிவிடும். பொறுப்புடைய 'குமுதம்' போன்ற இதழ்கள் இதுபோன்ற செய்திகளைப் பொழுதுபோக்காக எழுதுவது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும். எனவே இந்த அறிவிப்பை ஏற்று 'குமுதம்' தன்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளும் என்று நம்புகிறேன். அப்படி அது வருத்தத்தைத் தெரிவிக்காவிட்டால் பிறகு பேரவைத் தலைவர் என்ன முடிவு எடுக்கிறார் என்பதை நான் மீண்டும் தெரிவிப்பேன். அந்த அளவிற்கு நான் இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே எடுத்துச் சொல்லப்பட்ட இந்தக் கருத்து அந்தப் பத்திரிகையாளருக்கு எழுதப்பட்டு, அவர்களிமிருந்து பதில் பெறப்பட வேண்டும். அந்தப் பதிலிலே அவர்கள் வருத்தம் தெரிவித்து, அது அந்தப் பத்திரிகையிலே இடம் பெற்றுவிட்டால், அத்தோடு இந்தப் பிரச்சினை முடியலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய பேரவை முன்னவர் அவர்கள் தெரிவித்தபடியே இந்த விளக்கம் அவர்களுக்கு எழுதப்பட்டு, அவர்கள் அது குறித்து வருத்தம் தெரிவித்த பிறகு, அதைப் பற்றி மீண்டும் நான் தெரிவிப்பேன்.

(எ) அவையில் 5—5—1989 ஆம் நாளன்று ஓர் உறுப்பினர் பயன்படுத்திய சில சொற்கள் குறித்து.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நேற்றுப் பிற்பகலிலே தொடங்கி நல்லமுறையிலே மாலையும், இரவும் கழிந்தது என்பது உங்களுக்குத் தெரியும். நேற்று காலையிலே எங்களுடைய கட்சியினுடைய கொறடா பேசிக்கொண்டிருந்த நேரத்திலே, மொழிப் பிரச்சினை இங்கே வந்தது. அந்த நேரத்தில் ஒருவருக்கொருவர் தங்களுடைய கருத்துக்களைச் சொன்னார்கள். அத்தகைய கருத்துக்களைச் சொல்வதற்கு அனைவருக்கும் உரிமை உண்டு. ஆனால் நமது கலாச்சாரத்திற்கும்